

ஈழமுரசு
EELAMURASU FORTNIGHTLY
'உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை'

# போராண்டு 2008

2002ம் ஆண்டு சர்வதேச மத்தியஸ்தத்துடன் ரணில் அரசுடன் விடுதலைப் புலிகள் செய்துகொண்டிருந்த போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஆறு வருடங்களை நிறைவு செய்யவுள்ள நிலையில் தற்போதைய மகிந்த அரசு, அதிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது. ஆனால், போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை என்றைக்கோ உயிரிழந்து போய்விட்டது என்பதை தமிழீழ தேசியத் தலைவர் தனது 2006ம் ஆண்டு மாவீரர் தின உரையிலேயே மிக தெளிவாகச்சுட்டிக்காட்டி மகிந்த அரசு ஒப்பந்தத்திற்கு ஈமைக்கிரியைகளையும் நடத்தி முடித்துவிட்டது என்று கூறியிருந்தார். அந்த உடன்படிக்கை இறந்துவிட்டது என்பதை இப்போது மகிந்த அரசு ஒத்துக்கொண்டுவிட்டது.

2002ம் ஆண்டு போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதன் பின்னர், சிறீலங்காவின் ரணில், சந்திரிகா, மகிந்த அரசுகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் எந்தவித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையைக்கூட நடைமுறைப்படுத்த சிறீலங்கா மறுத்த நிலையில், காலத்தை இழுத்தடித்ததுடன், உடன்படிக்கையை மீறும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், விடுதலைப் புலிகளைச் சீண்டி போருக்குள் இழுத்துவிடும் பல்வேறு முயற்சிகளை பல வழிகளிலும் மேற்கொண்டது.

இதனால், பல போராளிகளையும் தளபதிகளையும் இழக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டனர். ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகளின் பொறுமை தமிழ் மக்களால் கூட ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு சென்றிருந்தபோதும், சர்வதேசத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் மௌனம் காத்துவந்தனர். இதனால், விடுதலைப் புலிகளை போருக்குள் தள்ளமுடியாதா என்ற இக்கட்டான நிலைக்குள் சென்ற சிறீலங்கா அரசு, தானே வலிந்த போர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தண்ணீரைக் காரணமாக்கி மாவிலாற்றில் போரைத் தொடங்கியது. ஆனால் அதனை சர்வதேசம் கவனத்தில் கொள்ளவில்லை. சிறீலங்காவின் பொய்ப் பிரச்சாரத்தை நம்பி அதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகப் பார்த்தது. ஆனால், தாக்குதலை நடத்தும் தயார்படுத்தலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மூதூரிலும், முகமாலையிலும் தாக்குதலை நடத்தி, அவர்களின் நிலைகளுக்குள் நுழைந்தபோது அதனை போர் நிறுத்தத்தை மீறும் செயலெனக் கண்டித்த சர்வதேச சமூகம், உடனடியாக உடன்படிக்கைக்கு முந்திய நிலைகளுக்கு திரும்பவேண்டும் என விடுதலைப் புலிகளை வலியுறுத்தியிருந்தது. மாறாக அதன்பின்னர் மூதூர், சம்பூர், வாகரை, தொப்பிக்கல, குடும்பிமலை, மட்டக்களப்பு என நில ஆக்கிரமிப்புப் போரை விரிவுபடுத்தி முழுமையான போரை சிறீலங்கா அரசு மேற்கொண்டபோது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடுநிலை வகித்த நாடோ அன்றி இணைத் தலைமை நாடுகளோ அதனை ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிய செயலாக கூறவில்லை. மௌனமாக இருந்து வேடிக்கை பார்த்து சிறீலங்காவின் போருக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தன.

இதனால் போர் விரிவடைந்தது. உடன்படிக்கையில் இருந்த அனைத்து விதிமுறைகளும் முற்றாக மீறப்பட்டன. வீதிகள் மூடப்பட்டு தமிழ் மக்களின் போக்குவரத்துக்கள் தடைப்படுத்தப்பட்டன. அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டனர். தினந்தோறும் பலர் படுகொலை செய்யப்பட்டனர். வான் தாக்குதல்களும், ஊடுருவித் தாக்குதல்களும் அதிகரித்தன. 2007ம் ஆண்டை முழுமையான ஒரு போர் நிலைக்கு மகிந்த அரசு கொண்டுவந்ததுடன், அடுத்த ஆண்டை போராண்டாக்குவதற்கான முன்னேற்பாடாக வரவு - செலவுத் திட்டத்தில் 2008ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவை பெருமளவு அதிகரித்து, அதற்கான ஆதரவையும் நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொண்டது.

இப்போது 2008 பிறந்து இரண்டு நாட்களில், 2008 முழுமையான போராண்டாக இருக்கப்போகின்றது என்பதை அறிவித்துவிட்டது. ஆறாண்டுகளாக உயிரிழந்தாலும் பெயரளவிலேனும் இருந்துகொண்டிருந்த உடன்படிக்கையை சிறீலங்கா ஒட்டுமொத்தமாக கிழித்தெறிந்துவிட்டது. உடன்படிக்கைகளை கிழித்தெறிந்து விடுதலைப் புலிகள்தான் போரை தொடங்கினார்கள் என்று கடந்த காலங்களில் குற்றச்சாட்டுக்களை சுமத்திவந்த சிறீலங்கா இம்முறை அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எதனையும் சுமத்த முடியாதளவிற்கு தாமே தமது கையாலேயே கிழித்தெறிந்துவிட்டது.

ஆறு ஆண்டுகள் இழப்புக்களுக்கு மத்தியிலும் பொறுமையாக இருந்து, சிங்கள தேசத்தின் உண்மை முகத்தை விடுதலைப் புலிகள் சர்வதேச உலகிற்கு அம்பலப்படுத்தி விட்டார்கள். இப்போது சர்வதேசம் என்ன செய்யப் போகின்றது என்கின்ற கேள்வியே தமிழ் மக்களிடம் எழுந்து நிற்கின்றது.

MANIFEST
Radio Programe 855 AM
English Radio Program
On Sri Lankan Affairs

# சுனாமியால் துயருற்றோரின் அவலங்கள் அரச தடையால் தொடர்கின்றன

நீர் நிரம்பிய குவளை ஒன்றினைக் கையில் ஏந்திய வாறு மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவனொருவன் வீட்டுவாசலில் நின்றிருந்தான். அவன் அயல்வீட்டுச் சிறுவனிடம் நான் வெட்டின கிணத்திலிருந்து எடுத்த தண்ணி இது எனப் பெருமிதமாகத் தனக்குரிய மொழி நடையில் கூறிக் கொண்டான்.

நானும் கிணறு வெட்டித் தண்ணி எடுப்பன் தானே என மற்றைய சிறுவன் கூற, அவர்கள் இருவரும் கிணறு வெட்டுவதாகச் சென்ற திசையை நோக்கினோம். அவர்கள் இருவரும் ஒரு வீட்டுக்குள் சென்றனர். இவர்கள் தமது பந்தயத்தைக் கைவிட்டுவிட்டார்கள் என்ற எண்ணத்துடன் வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்தோம். வேகமாகச் அச்சிறுவர்கள் இருவரும் வீட்டின் அறையொன்றினுள் அமர்ந்து மணற்தரையை கைகளால் போட்டி போட்டுக் கிளறிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கையில் வரும் மணலிலிருந்து நீர்த்துளிகள் சிந்தின.

இந்த வீடு மூன்று சிறுவர்களும் தாயும் வசிக்கும் ஒருசிறு கொட்டகை. சுனாமியால் தமது உடமைகளை முற்றாக இழந்து வறுமையின் உச்சத்தை எட்டிநிற்கும் குடும்பமிது. இவர்கள் முல்லை நகரின் கள்ளப்பாடு தெற்கு எனும் முகவரியைக் கொண்டவர்கள். இதுதான் இவர்களின் நிரந்தர வசிப்பிடம். அக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் சிறிய கிரவல் வீதியிலிருந்து வலப்பக்கமாக 50 மீற்றர் தொலைவில் இவ்வாறான வீட்டுத் தொகுதி ஒன்று அமைந்துள்ளது. வீதியிலிருந்து பார்க்கும் பொழுது கடற்கரை மணலில் சிறுவர்கள் அமைத்த சிற்றில்களையும் விஞ்சியதாக இவை காட்சி தருகின்றன.

இவை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் கொடுமையை வெளிப்படுத்தும் மனித அவலத்தின் உச்சங்கள்.

கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் இவர்கள் தமது தற்கால இருப்பிடங்களையும் இழந்திருந்தனர்.

இடைவிடாது பொழிந்த மழைத்துளிகள் அக்கடற்கரை மணற் துணிக்கைகளில் தஞ்சமடைந்ததோடு மேலாதிக்கமாக இவர்களின் குடியிருப்பையும் ஆக்கிரமித்திருந்தன. அப்பகுதியில் அமைந்திருந்த இது போன்ற பல குடிசைகளும் மழை நீரின் தாக்கத்திற்கு இலக்காகியிருந்தன.

வீட்டினுள் சென்று பார்த்தோம். கூரைக்கு மேலாக சற்று இருள் சூழ்ந்த மேகங்கள் தெளிவாகத் தெரிந்தன. இடையிடையே ஈர்க்குகளும் சிறிய மரத்தடிகளும் மட்டும் முகில்களைப் பார்க்கத்தடை விதித்தன. ஒருபக்கம் சிறிய தறப்பாள் துண்டு கூரையை மூடி விரிக்கப்பட்டிருந்தது. அதனூடாக வந்த மெல்லிய ஒளிக்கற்றைகள் சிறுவர்கள் வெட்டிய கிணற்றின் ஆழத்தைத் தெளிவாகக் காட்டின. தெளிந்த நீர் தெளிவாகத் தெரிந்தது.

சுனாமித் திட்டத்தில் வீடுகளை அமைத்துத் தருவார்கள் என்று எதிர்பார்?த்துக் காத்திருக்கும் குடும்பங்கள் இவை. 2004.12.26 அன்று உலகையே உலுக்கிய சுனாமிப் பேரலை தாக்கத்தில் அழிவுற்ற முல்லை நகரின் ஒரு கிராமம் தான் கள்ளப்பாடு தெற்குக் கிராமமும் சுமார் 44 பேர் வரை இக் கிராமத்திலிருந்து பலியாகியிருந்தார்கள் கிராமமே முற்றாக அழிவடைந்திருந்தது.

இதனையடுத்து தப்பிப்பிழைத்தவர்கள் பல்வேறு நலன்புரிநிலையங்களில் தஞ்சடைந்தனர். பின் உண்ணாலப்பிலவு இடைத்தங்கல் முகாமில் குடியமர்த்தப்பட்டனர். அங்கு இரண்டு வருடங்களைக் கழித்த இவர்கள் தமக்கான நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படுமென எதிர்பார்த்தனர். இந்நிலையில் அப்பகுதி மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பொறுப்பினை ஏற்றிருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் 2006ம் ஆண்டு 8ம் மாதம் சிறீலங்கா அரசால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையினை அடுத்து அப்பணியினை நிறைவாகச் செய்யமுடியாது போனதாக அறிவித்தனர். குறித்த காலத்திற்குள் குறித்த எண்ணிக்கையானோருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்துவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டனர். இதனால் நூறு வரையான குடும்பங்கள் வீடுகள் அற்ற நிலையில் வாழ்கின்றனர். இவர்களுக்கு தற்காலிக குடியிருப்புக்களையேனும் அமைத்துக் கொடுக்க எவரும் முன்வரவில்லை. இதனையடுத்து உண்ணாப்பலவு இடைத்தங்கல் முகாமில் கொட்டமை அமைத்திருந்த தளபாடங்களைக் கொண்டு கள்ளப்பாட்டில் குடில்களை அமைத்துக் குடியேறினர். சுனாமிப் பேரலைத் தாக்கத்துடன் தமது பொருளாதாரத்தின் அடித்தளத்தை இழந்த இம்மக்கள் தொடரும் போர்ச்சூழலினால் தொழிலையும் இழந்து வறுமையில் வாடுகின்றனர்.

இதேபோன்று முல்லைத்தீவு தியோகு நகர் மக்களும் சுனாமிப் பேரலைத் தாக்கத்தையடுத்து சுவாமித்தோட்டம் எனுமிடத்தில் 80 தற்காலிகக் குடில்களில் 93 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இவைகளில் ஐந்து குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் அமைக்கப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஏனையோர் இன்றுவரை சுவாமித் தோட்டத்தின் தற்காலிக குடில்களிலேயே வாழ்கின்றனர். ஏறத்தாழ ஆறுமாத காலம் மட்டுமே இக்குடில்களில் வாழ வேண்டி வரும் என்ற நோக்கில் அக்குறிப்பிட்ட கால்த்திற்குத் தாக்குப்பிடிக்கக் கூடியவகையிலேயே இக்குடில்கள் அமைக்கப்பட்டன. ஆனால் மூன்று வருடங்களை அதில் கழிக்க வேண்டியநிலைக்கு இம்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுபோன்று சுனாமிப் பேரலைத் தாக்கத்திற்குள்ளான தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் இன்று வரை இருப்பிடமின்றி துன்பப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இவ்விடயத்தோடு தொடர்புடைய அனைவரிடமும் நிலையினை வெளிப்படுத்தி விட்டோம். ஆனால் எந்தப்பலனும் இல்லை. என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் சம்மந்தப்பட்ட எவரும் தம்மீது அக்கறை கொள்ளவில்லை என ஒருசாரார் கருதுகின்றனர். ஆனால் இம்மக்களின் தொடர் துன்பங்களும் அவலங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் சிறிலங்கா அரசதரப்பினரே. ஏனெனில் சுனாமிப் பேரலையின் தாக்கத்தினைத் தொடர்ந்து மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கான உதவிகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தது. அதனடிப்படையில் அழிவடைந்த பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப 48 நாடுகள் முன்வந்தன என சிறிலங்காவின் அன்றைய நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்திருந்தார். அத்தோடு பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு இத்தாலி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அன்று இத்தாலி பதில் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை கனடிய அரசின் நிதியுதவி சரி சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் என கனேடியத் தூதுவர் முன்னாள் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

இந்நிலையில் கிடைக்கப்பெற்ற நிதி எதனையும் தமிழ்மக்களைச் சென்றடையாத வகையில் கைச்சாத்திடப்பட்ட சுனாமிக் கட்டுமானத்திற்கான வரைபையும் அன்றைய அரசாங்கம் செல்லுபடியற்றதாக்கியிருந்தது. இதன் மூலம் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய புனரமைப்பு நிதியை அரசு கௌரவமாக சூறையாடிக் கொண்டது. இதன் காரணமாகத் தமிழர் தாயகப் பகுதியில் புனரமைப்புப் பணிகள் பாரிய பின்னடைவை எதிர்கொண்டன.

இது இவ்வாறிருக்க தாயக மக்களின் உண்மை நிலையினை உணர்ந்து கொண்ட சில தொண்டு நிறுவனங்கள் படிப்படியாக தம்மாலான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தன. இதற்கமைவாக கட்டம் கட்டமாக அழிவுகளை எதிர்கொண்ட மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையினை அறிந்த சிங்களத் தலைமைகள் தமிழ்மக்களின் அபிவிருத்தியை முடக்கத் திட்டம் தீட்டின. அதன் ஒரு கட்டமாக 2006.08.11 ஆம் திகதியன்று பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக கட்டடக் கட்டுமானத்திற்கான பொருட்களை எடுத்து வருவதற்கான தடை இறுக்கமாக விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏற்கனவே ஆமை வேகத்தில் நடைபெற்று வந்த ஒருசில அபிவிருத்திப் பணிகளும் முடங்கிப் போயின.

இதன் மூலம் தமிழ்மக்கள் தொடர்ந்தும் பெரும் அவலத்திற்குத தள்ளப்பட சிங்களம் மனநிறைவடைந்தது. ஓலைக் குடில்களும் மணற்தரைகளுமே இம்மக்களின் வாழ்வென்றானது.

எனவே சுனாமிப் பேரலைத் தாக்கம் நிகழ்ந்து மூன்று ஆண்டுகளைக் கடந்தும் மக்களின் அவலம் தீராமைக்கு மூல காரணம் சிங்களமே.

இந்நிலையில் இன்று ஓலைக் குடில்களில் வாழும் மக்கள் எதிர்பார்ப்பது அக்குடில்களின் கூரைகளையாவது வேயக் கிடுகுகளேனும் கிடைக்க வேண்டுமென்றே. இவற்றையாவது வழங்க தற்போது செய்யப்பட்டு வரும் தொண்டு நிறுவனங்களும் ஏனையோரும் முன்வர வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

- இ.சசிக்குமார். (நன்றி - ஈழநாதம்)